நாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. நா. ராஜகோபால், எம்.எஸ்.சி., எம்.எட். எம்.பில்.,

ந. க. எண்: 1894/அ1/2015, நாள்: 05-06-2017.

பொருள்: கருணை அடிப்படை நியமனம் – பணிக்காலத்தில் காலமான ஆசிரியர் கா. குணசேகரன் என்பாரின் வாரிசுதாரர் திருமதி. இரா. திலகவதி என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமன ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை எண். 120 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள். 26-06-1995.
2. அரசாணை எண். 42 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள். 12-03-2007.
3. அரசாணை எண். 202 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள். 12-03-2007.
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26205 /ஜே-4/2015, நாள். -06-2017.

*****************

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட ஆணைகளின்படியும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் வேதாரண்யம் சரகம், நாகக்குடையான் சேரி, ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 30-09-2010 அன்று இறந்த கா. குணசேகரன் என்பவரின் வாரிசுதாரர் திருமதி. இரா. திலகவதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணி விதிகள் விதி 10 a(i) (1) ன்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி | நியமனம் அளிக்கப்படும் பதவி மற்றும் அலுவலகத்தின் பெயர் | காலிப்பணியிட விவரம் |
|---|---|---|
| திருமதி. இரா. திலகவதி<br>க/பெ. கா. குணசேகரன் (லேட்)<br>5/37டி, பண்டாரத்தான்தெரு<br>புஷ்பவனம்<br>வேதாரண்யம் வட்டம்<br>நாகப்பட்டினம் மாவட்டம் | இளநிலை உதவியாளர்<br>உதவி தொடக்கக் கல்வி அலுவலகம்<br>வேதாரண்யம் | இரா. கதிரவன்<br>இளநிலை உதவியாளர்<br>பதவி உயர்வு<br>காலிப்பணியிடம் |

<u>நிபந்தனைகள்:</u>

1. பள்ளி இறுதித் தேர்வில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவராக இருப்பின் தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும்.

2. தனியாரின் எஸ். எஸ். எல். சி சான்றின் உண்மைத் தன்மையை அறிய எடுக்கப்படும் நடவடிக்கையில் தனியர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்று உண்மையானது அல்ல என்றோ விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாது என்றோ கண்டறியப்பட்டால் தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன் அறிவிப்புமின்றி நீக்கரவு செய்யப்படும்.